**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No.13/2024**
**Prosecution Witness : PW 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பெருமாள் | | : |
| Father / Husband Name | : ரங்கன் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused present )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **03/05/2024**

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது எண்.6, வசந்தபுரி, பட்டம்மாள் நகர், பூந்தமல்லி என்ற முகவரியில் குடியிருந்து, பெயின்டர் வேலை செய்து வருகிறேன். கடந்த 25.01.2023ஆம் தேதி மதியம் 2.50 மணியளவில் என் அம்மா லலிதா என்பவர் சூளூர்பேட்டையில் உள்ள எனது அக்கா வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது, ரெட்ஹில்ஸ் பஸ் ஸ்டாப்பில் இறங்கி சாலையை கடக்கும்போது, ஆந்திரா பஸ் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து குறித்து எனக்கு மருத்துவமனையில் இருந்து தகவல் வந்தது. வண்ணாரபேட்டையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது, என் அம்மாவிற்கு இடது கை, வலது கால் நசுங்கியிருந்தது. என்னிடம் 2 வார்த்தைகள் பேசிவிட்டு இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையொப்பம்தான். ( **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

வழக்கு புகாரை நான் எழுதவில்லை. கையொப்பம் மட்டும்தான் செய்தேன். விபத்து எவ்வாறு நடந்தது, எந்த வாகனத்தால் நடந்தது, யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. தகவலின் மூலமாகத்தான் தெரியும். என் அம்மா சாலை விபத்தில் இறந்ததால், அவரது பிரேதத்தை நல்லடக்கம் செய்ய வேண்டி புகார் கொடுத்தேன் என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No.13/2024**
**Prosecution Witness : PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : அருள்குமார் | | : |
| Father / Husband Name | : ஜெயகொடி | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused present )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **03/05/2024**

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது எண்.15, சுமித்ரா நகர், 2வது தெரு, பூந்தமல்லி என்ற முகவரியில் குடியிருந்து, ஓட்டல் வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 25.01.2023ஆம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில், நான் ஒரு வேலையாக ரெட்ஹில்ஸ் சென்றிருந்தபோது, போலீசார் வரைபடம் வரைந்தார்கள். இடம் எனக்கு சரியாக ஞாபகமில்லை. பின்னர் போலீசார் என்னிடம் அந்தயிடத்தில் கையொப்பம் வாங்கினார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். ( **பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. நான் ரெட்ஹில்ஸில் எந்தயிடத்தில் இருந்தேன் என்றும், போலீசார் எங்கு வைத்து கையொப்பம் வாங்கினார்கள் என்றும் எனக்கு சரியாக ஞாபகமில்லை. புகார்தாரர் பெருமாள் என்பவரை எனக்கு தெரியும் என்றால் சரிதான். புகார்தாரர் எனக்கு தெரியும் என்பதால், நான் வழக்கு சம்பவம் குறித்து புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும், நான் கையெழுத்து காவல் நிலையத்தில் வைத்துதான் செய்தேன் என்றாலும் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI**

**Case No : CC No.13/2024**
**Prosecution Witness : PW 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : தமிழ்செல்வன் | | : |
| Father / Husband Name | : விநாயகம் | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

( Accused present )

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 ( Central Act 44 of 1969) on the day of **03/05/2024**

**முதல் விசாரணை ( அரசு தரப்பில் )**

நான் தற்போது எண்.11, ராஜ அகரம் தெரு, பூந்தமல்லி என்ற முகவரியில் குடியிருந்து, மொபைல் கடையில் வேலை செய்து வருகிறேன். கடந்த 25.01.2023ஆம் தேதி சுமார் 2.50 மணியளவில், AP 0215 என்ற ஆந்திரா பேருந்து லலிதா என்பவர் மீது மோதி இடது பக்கம் முழுவதும் நசுங்கிவிட்டது. இது சம்மந்தமாக ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணைக்காக என்னை விசாரணை செய்தார்கள். வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில் )**

விபத்து எவ்வாறு, எந்த வாகனத்தில் ஏற்பட்டது என்பது குறித்து நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது. தகவலின்பேரில்தான் எனக்கு தெரியும். புகார்தாரர் பெருமாள் எனக்கு தெரிந்தவர் ஆவார். புகார்தாரரின் பிரேதத்தை மருத்துவமனையிலிருந்து பெற்று நல்லடக்கம் செய்ய வேண்டி விசாரணை செய்வதற்காக என்னை சாட்சியாக இருக்க கோரினார்கள் என்றால் சரிதான். விசாரணையில் நானும் கையொப்பம் செய்தேன். விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், பெருமாள் சொன்னதின் பேரில் நான் வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.